பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸூ சித்திரை 23 ம் திங்கட்கிழமை [06—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 153

படையினரைத் தேடித் தாக்குதல்:

# ஓமந்தை அருகே கடுஞ்சமர்!

# 20 ராணுவத்தினர் உயிரிழப்பு!

## 18 சிப்பாய்களின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 6

வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் கோழியகுளம் பகுதியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரைத் தேடிச்சென்று விடுதலைப் புலிகள் தாக்கினர்.

நேற்றுப்பகல் இப்பகுதியில் நீண்டநேரம் இடம்பெற்ற சண்டையில் இருபதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர். அவர்களில் பதினெட்டுப் பேரின் சடலங்களையும், பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தத் தாக்குதலில் படையினர் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் காலை 10 மணி முதல் நண்பகல் 1 மணி வரை நடைபெற்ற சண்டையின் போது 16 சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிகள், இரு அவ்ரோ விமானங்கள் என்பன படையினருக்கு உதவியாக இப்பகுதியில் கடும் தாக்குதலை மாறி மாறி நடத்திய வண்ணம் இருந்தன.

இந்த விமானத் தாக்குதல்களுக்கு மத்தியில் படையினரைத் தேடித் தாக்கும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபட்டனர்.

நேற்று நண்பகல் இரண்டு மணிமுதல் நான்கு மணி வரை இடையிடையே மோதல்கள் இடம்பெற்றன.

மீண்டும் மாலை 4.30 மணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றுக் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், மே 6

கோழியகுளம் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ஜி பி. எம். ஜி – 1
- ★ மேலதிக சுடுகுழல் – 1
- ★ அதற்குரிய லிங் ரவையுடன் – 366
- ★ மினிமினி எல்.எம்.ஜி – 3
- ★ அதற்கான சுடுகுழல் – 1
- ★ எம். என் சி ரக துப்பாக்கிகள் – 16
- ★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் – 53
- ★ 60 எம். எம். மோட்டார் – 1
- ★ அதற்குரிய ஷெல்கள் – 10
- ★ தொலைத்தொடர்பு கருவிகள் – 2
- ★ 5.56 ரகரவைகள் – 1,600
- ★ தொலைக்காட்டிகள் – 2
- ★ 40 எம். எம். ஷெல் – 6
- ★ தோட்டா ரவைகள் – 366
- ★ கைக்குண்டுகள் – 4
- ★ குண்டு துளைக்காத கவசங்கள் – 2

[ஒ-5]

## விளிஸ்டன் வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 6

வவுனியா கோழியகுளம் பகுதியில் நேற்று படையினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாவது லெப்டினன்ட் விளிஸ்டன் [திருக்கோவில் வரம்] வீரமரணமடைந்தார்.

[உ]

தாண்டிக்குளம் தாக்குதலில்

## காயமுற்ற பிரெஞ்சு டாக்டர்கள் பாரிஸுக்கு நேற்று அவசர பயணம்

கொழும்பு, மே 6

வவுனியா, தாண்டிக்குளத்தில் வைத்து ஹெலிக்கொப்டர் மற்றும் பொம்மர்களினால் தாக்குண்டு, காயமடைந்த பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த நால்வர் நேற்று பாரிஸுக்கு அவசர பயணமாகினர்.

வவுனியாவிக் ஊரடங்கு அமுலில் இருந்ததால், பாதுகாப்புப் படையினரின் முன் அனுமதி பெற்று, செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன் சென்ற போதிலும் வைத்தியக் குழுவினர் தாக்கப்பட்டது குறித்து பாதுகாப்பு அமைச்சிடம் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் மொத்தம் ஐந்து பேர் காயமடைந்தனர் என்று இப்போது தெரியவருகிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கப்பல் மீது அதிரடித் தாக்கு; ஆறு கடற்படையினர் பலி!

கொழும்பு, மே 6

பருத்தித்துறை கடலில் தரித்து நின்ற ஸ்ரீலங்கா கடற்படை கப்பல் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தில் 6 படையினர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை அதிகாலை வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுடன் சென்ற இரு கரும்புலிகள் இந்த அதிரடித் தாக்குதலை நடத்தினர் என்பதும்—

அப்போது கடற்படைக் கப்பல் சேதமடைந்ததுடன், கரும்புலிகள் இருவரும் வீரமரணமடைந்தனர் என்பதும் தெரிந்தவையே.

[ஒ-த]

## இராணுவ நடவடிக்கைகளுக்கு டிசம்பர் வரை கால அவகாசம்?

### தளபதி ஹமில்டன் கேட்கிறார்

கொழும்பு, மே 6

வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு ஸ்ரீலங்கா இராணுவப் படைக்கு ஜூனுக்கும் பின்னரும் மேலும் ஆறு மாத கால அவகாசம் [டிசம்பர் மாதம் வரை] தேவையாம்!

—இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அரசுக்கு சமிக்ஞை காட்டியிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே போட்ட திட்டப்படி ஜூன் மாதத்திற்குள் இராணுவ நடவடிக்கைகளைப் பூரணப்படுத்துவது கஷ்டம் என்றவாறு அவர் தெரிவித்துள்ளாராம்.

வடக்கு - கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான இராணுவத் திட்டம் ஒன்றை ஜெனரல் வணசிங்கா கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தார்.

அந்தத் திட்டத்தின் பிரகாரம்—

ஜனவரி முதல் மார்ச் மாதத்துக்குள் கிழக்கில் பூரண நிலை கொள்வதற்கான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்—

யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஏப்ரலில் ஆரம்பித்து ஜூன் மாதத்திற்குள் முடித்து விடுவது எனவும்—வகுக்கப்பட்டிருந்ததாம்.

ஆனால் தீர்மானித்தவாறு [illegible] மார்ச் கடைசிப் பகுதியில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



காலத்தை கோட்டை விட்டுப் போட்டு இப்ப அவகாசம் கேக்கினம்......!

## திருமலைக் காட்டில் ராணுவம் - புலிகள் மோதல்

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் திருகோணமலை மாவட்டம், கடவானைக் காட்டுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமைப் படையினர் சுற்றிவளைக்க முயன்றனர். அப்போது கடும் மோதல் மூண்டது.

4 ஹெலிகள் இந்தப் பகுதியில் தாக்குதல் நடத்த, படையினர் அப்பகுதியை நோக்கி முன்னேறினர்.

அச்சமயம் படையினர் கண்ணிவெடிகளில் சிக்கினர், தொடர்ந்தும் படையினர் முன்னேறிய போது கடும் மோதல் மூண்டது. சுமார் 15 நிமிடங்கள் வரை சண்டை நீடித்தது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் 2 ஹெலிகள் தரை இறங்கிச் சென்றன. படையினரும் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

அதேசமயம் கடவானைக் கடற்கரைப் பகுதி முகாமில் இருந்தும், மங்கிபிரிட்ஜ் முகாமில் இருந்தும் கடவனைக் காட்டுப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

[ஒ-5]

## ● புஷ் ஆஸ்பத்திரியில்!

வாஷிங்டன், மே 6

மூச்சுத் திணறல் காரணமாக வாஷிங்டன் கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மேலும் வைத்திய பரிசோதனைக்காக அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளார்.

அவரது இருதயத் துடிப்பு ஒழுங்கற்றதாக தொடர்ந்து காணப்பட்டதை அடுத்தே டாக்டர்கள் அவரை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தினர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப் பகுதி அகதிகள்:

## பராமரிக்கும் பொறுப்பு தொண்டர் நிறுவனத்திடம்

யாழ்ப்பாணம், மே 6

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உலர் உணவுகளை செயலகம் வாராவாரம் வழங்கும். அவர்களை பராமரிக்கும் பொறுப்பை தொண்டர் நிறுவனங்கள் ஏற்கும்.

யாழ். செயலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். செயலகத்தால் இந்த அகதிகளுக்கு வழங்கப்பட்ட சமைத்த உணவு விநியோகம் கடந்தவெள்ளிக்கிழமையுடன் நிறுத்தப்பட்டது.

சனிக்கிழமைதொடக்கம்புதிய முறையின் கீழ் பராமரிக்கும் பொறுப்பை தொண்டர் நிறுவனங்கள் ஏற்கவிருந்தன. [இ-3]


## உடுவில் மகளிர் கல்லூரி

இரண்டாந்தவணை 8 - 5 - 91 புதன்கிழமை ஆரம்பமாகின்றது

[16546] அதிபர்



## தேவை

ஆண், பெண்களுக்குரிய ஆடைகள் நவீன முறையில் வெட்டி, தையல் வேலை செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் 15 - 05 - 1991 க்கு முன் நேரில் சமுகம் தரவும்.

யோகாஸ் புடைவை மாளிகை,
16, பெரியகடை யாழ்ப்பாணம்.
[16683]



## SCIENCE ACADEMY NALLUR

YE 9, YE 10, YE 11 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | :- | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | :- | வரமதேவா |
| தமிழ் | :- | தங்கராஜா |
| வர்த்தகம் | :- | ஜீவா |
| சமூகக்கல்வி | :- | திருக்குமார் |
| ஆங்கிலம் | :- | கணேசன் |

20-05-91 முன்பு
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
[C/4979]


## ஓராண்டு நினைவஞ்சலி



உதயம்:
09 - 10 - 1912

அஸ்தமனம்:
17 - 04 - 1990

அமரர்
### வித்துவான் சு. இ. பொன்னையா

திதி: 06 - 05 - 1991

ஆண்டு ஒன்று ஆகிடினும் அருமை ஐயாவே
உங்கள் மறைவினை ஓர் நிஜம் என இன்னமும் நம்ப
மறுக்கும் எமது இதயங்களில் என்றென்றும் நிலைத்
திருந்து நல்வழிகாட்ட வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவன் திருவருளை வேண்டிநிற்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்.

சரவணை மேற்கு,
வேலணை.
[16670]

## மூளாயில் ஷெல்கள்!

சுழிபுரம், மே 6

காரைநகர் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏவிய சில ஷெல்கள் மூளாய் தெற்குப் பகுதியில் விழுந்து வெடித்தன.

குடியிருப்புப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்த போதிலும், தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. [ஒ-28]

## அகதிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே. 6

யாழ். அடைக்கலமாதா தேவாலயத்தில் தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட அகதி முகாம் நேற்றுடன் மூடப்பட்டுவிட்டது.

இந்த முகாமில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கியிருந்ததால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படக்கூடிய அபாயநிலை தோன்றியது. அதை அடுத்தே முகாம் மூடப்பட்டது.

அங்கு தங்கியிருந்தவர்கள் நகரிலுள்ள ஏனைய முகாம்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [ஒ-3]

## ● இப்படியும் திருடர்!

குருநகர், மே 6

வேறு இடத்தில் திருடிய பொருள்களை, இன்னொரு வீட்டில் வைத்துவிட்டு, அங்கிருந்த வீடியோ டெக், எலக்ட்ரோனிக் பொருள்கள். 65 க்கும் மேற்பட்ட சாறிகள் உட்பட பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த பொருள்களை சிலர் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம், யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள ஒரு வீட்டில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத சமயம், ஜன்னல் ஊடாக உட்புகுந்தே இத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகப் புகாரிடப்பட்டுள்ளது. [ஒ-51]

## நேபாளத்தில் தேர்தல்

காத்மண்டு, மே 6

நேபாளத்தில் பல கட்சிகள் போட்டியிடும் சுதந்திரப் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியை ஒரு கோடிப் பேர் பெற்றுள்ளனர். [ஓ-எ]

## சூறாவளிச் சேதம்

டாக்கா, மே 6

கடந்த திங்கட்கிழமை வீசிய சூறாவளி காரணமாக பங்களாதேஷுக்கு ஏற்பட்ட சேதங்கள் நூறு கோடி டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. [அ-எ]

## ● புஷ்ஷுக்கு மூச்சுத் திணறல்

வாஷிங்டன், மே 6

மூச்சுவிடக் கஷ்டப்பட்ட நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வாஷிங்டனில் உள்ள கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை 67வயதான திரு. புஷ் காம்ப் டேவிட் வாசஸ்தலத்தில் தேகப்பயிற்சி செய்து கொண்டிருந்த போது மூச்சுத் திணறலுக்குள்ளானார்.

மாரடைப்பினால் திரு. புஷ் பாதிக்கப்படவில்லை என்றும்— தற்போது அவரின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் வைத்திய [illegible] [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு பரமநாதன் ஏகாம்பரம்
[இளைப்பாறிய கல்லூரி அதிபர்]

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பரமநாதன் ஏகாம்பரம் 01 - 05 - 91 அன்று நியூசிலாந்தில் காலமானார். அன்னார் வந்தாறுமூலை மகா வித்தியாலயம், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றியவர். அன்னாரது ஈமக்கிரியைகள் 06 - 05 - 91 இல் நியூசிலாந்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:-
ப சச்சிதானந்தன்
புலோலி. [16545]

### ஆறுமுகம் கனகசிங்கம்
[கிராம சேவை அலுவலர், வளலாய்]
[முன்னைநாள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்]

உசனைப் பிறப்பிடமாகவும், இடைக்காட்டை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசிங்கம் காலமாகிவிட்டார். அன்னார் திருமதி பார்வதி கனகசிங்கத்தின் [பிரதம தாதி, மந்திகை வைத்திய சாலை] அன்புக் கணவரும், திருமதி மு. அனுஷா, க. திவஷா [இடைக்காடு மகாவித்தியாலயம்], க. நிர்மலன் [சுவிஸ்], க. சுமணன் [இடைக்காடு மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத்தந்தையும், கந்தசாமி, முருகவேல் [ஆசிரியர் கிளி / புனித திரேசா ம. மா. வி.] ஆகியோரின் அன்பு மாமனாரும், மு. துளசிகாவின் அருமைப் பேரனுமாவார்.

அன்னார் பொன்னுத்துரை, சிவஞானம் [உசன்], குணரட்ணம், சிவலோகபதி [உசன்], இரத்தினசபாபதி, புவிதவதி [எழுதுமட்டுவாள்], ஆறுமுகம் சிவபாதசுந்தரம் [வட்டக்கச்சி], இன்னராசா இராசபூபதி [55ஆம் கட்டை] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-05-91 வெள்ளிக்கிழமை அன்று பி. ப. 5-00 மணியளவில் இடைக்காட்டில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. முருகவேல்
[மருமகன்]
[16686]

### திருமதி மரியமுத்து மார்சலின்பிள்ளை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி மரியமுத்து மார்சலின்பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சா மார்சலின் பிள்ளை [செல்வராசா மாஸ்டர்] அவர்களின் அன்பு மனைவியும், மடுமலர் [ஆசிரியை, யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி], லூட்ஸ்மனர் [ஆசிரியை, வல்வை சிதம்பராக் கல்லூரி], கோமல் சுபேந்திரன் [கிறிஸ்], அமலேஸ்வரி [ஆசிரியை, வல்வை மகளிர் வித்தியாலயம்] ஆகியோரின் அருமைத் தாயாரும், உருத்திரகுமாரன், யோகேஸ்வரராசா ஆகியோரின் மாமியாரும், மரியம்மா, காலம்சென்ற இக்னேசியஸ் துரைசிங்கம் [சட்டத்தரணி], விறிசிற்றம்மா, காலம்சென்ற செல்வரெத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், சித்திரா, ராஜன், ரூபன், றோகன், வினி, ரவின் ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 6-5-91 திங்கட்கிழமை [இன்று] மாலை 4-00 மணியளவில் வல்வெட்டித்துறை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. [16692]

### M. துரைராஜா [குணம்]
[முன்னாள் மத்திய வங்கி உத்தியோகஸ்தர்]

யெகோவாவின் சாட்சிகளின் ஆனைக்கோட்டை சபைப் போதகர் 5 - 5 - 91 இல் காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தியேந்திரன் [பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி], சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும்; சுலட்டி கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசுத் தம்பதிகளின் அன்பு மகனும், மு. தவராசாவின் அன்புச் சகோதரனும், ஆனைக்கோட்டை தம்பிராசா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை [இல 236 மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை] அன்னாரின் இல்லத்தில் 6 - 5 - 91 பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெற்று ஆனைக்கோட்டை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
து. மகேஸ்வரி (மனைவி)
பிள்ளைகள்
[16547]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## பொது முகாமையாளர் (101/6) பதவிக்கான விண்ணப்பம்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் மேற்காண் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான விண்ணப்பங்கள் 20-05-1991 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் சங்கப் பணிமனையில் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலிலோ, நேரிலோ, தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி' எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

1. கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவு ஊழியர் 7வது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 8வது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் [அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் / கைத்தொழில் நிறுவனத்தில்] பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் [உயர் பிரிவு] தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. [உயர் பிரிவு] பரீட்சையில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம்.

2. வயது:

25 தொடக்கம் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

3. சம்பள அளவுத் திட்டம் — 101-6:

1305 — 2370 / 60x4 — 75x11 ம், அங்கீகரிக்கப்பட்ட படிகளும்;

முக்கிய குறிப்பு:

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களினதும், அனுபவ சான்றிதழ்களினதும், கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் பிரதிகள் பவுண் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை சங்கப் பணிமனையில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
கட்டைவேலி — நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.

[சி/4971]

## Jaffna College Institute of Technology

Vaddukkoddai

## Vacancy

A Vacancy exists for a suitable person to be on the staff and take responsibility in the administration of the Institute.

**Qualification:**

An Engineering Degree from a recognised university preferably with a post graduate qualification and necessary experience in teaching & administration.

Salary: Negotiable.

Closing Date:
On or Before 31st May 1991

Send your applications either to

The Rev Principal,
Secretary [J. C. I. T. & A.]
Jaffna College,
Vaddukkoddai.

OR

The Secretary
C/o C.S.I Parsonage,
17, Francis Road,
Colombo - 6

Secretary,
J.C.I.T. & A.

[C-4966]

# உலர் உணவு அட்டை இன்றி அகதிகள் திண்டாட்டம்

புலியங்கூடல், மே 6

இராணுவ நடவடிக்கை காரணம் இடம்பெயர்ந்து வந்த தீவுப்பகுதி மக்கள் பலர் தமது உலர் உணவு அட்டைகளை கைவிட்டு வந்துள்ளனர்.

இதனால் இடம்பெயர்ந்த இடங்களில் உலர் உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் திண்டாடுகின்றனர்.

இந்த அட்டை இல்லாதவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர்களிடம் தங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆனால் சில பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்கள் இடம்பெயர்ந்தவர்களைப் பதிவு செய்ய மறுக்கின்றார்களாம். தங்களுக்கு அறிவித்தல் வந்தபின்பே பதிவு செய்யமுடியுமென்று அவர்கள் கூறுவதாக இடம்பெயர்ந்தவர்கள் சிலர் புகார் தெரிவிக்கின்றனர். [இ 125]

## குப்பை வாளிகள் இங்கு தயாரிப்பு

யாழ்ப்பாணம், மே 6

யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான குப்பைவாளிகள் தற்பொழுது வைத்தியசாலை மின் ஒட்டுத் தொழிலகத்திலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை கொழும்பில் இருந்தே குப்பை வாளிகள் தருவிக்கப்பட்டு வந்தன. [த-15]

## யானைகள் அட்டகாசம்

மானிப்பாய், மே 6

கிளிநொச்சி- முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பிரமந்தன் ஆறு, விசுவமடு, உடையார்கட்டு, தருமபுரம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

வரட்சிக் காலத்தில் யானைகள் கூட்டம் கூட்டமாக காடுகளிலிருந்து கிராமப் பகுதிகளுக்குள் பிரவேசித்து அங்குள்ள தோட்டங்களையும் குடிசைகளையும் அழித்து வருகின்றன.

இதனால் பல பொதுமக்களும் காயமடைந்துள்ளதாக தெரிய வருகிறது. [த-90].

## இலைச் சுருள்

மானிப்பாய், மே 6

இந்த ஆண்டு யாழ்ப்பாண பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மிளகாய்ச் செடிகள் இலைச்சுருள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. [த-90]

## கிணறு கட்ட மானிய உதவி

தென்மராட்சி, மே 6

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தோட்டம் நிலைப்படுத்திச் செய்கைக்குரிய கிணறுகளைக் கட்டுவதற்கு மானிய அடிப்படையில் ரூபா 2,800/- வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான விண்ணப்பங்கள் அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்களினால் கோரப்பட்டுள்ளன. [த-117]

## தபால் முத்திரை 151 ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், மே 6

உலகின் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்டு இன்று 151 வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

1840 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி பிரிட்டனே முதன் முதலாக தபால் தலை வெளியீட்டை ஆரம்பித்து வைத்தது.

அப்போது வெளியிடப்பட்ட ''பென்னி பிளாக்'' என்ற முதலாவது முத்திரை 1988 இல் லண்டனில் 71 ஆயிரத்து 50 பவுணுக்கு ஏலம் போனது. [இ-த]

## வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ் நகர்ப் பகுதி வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. [இ-15]

## 9-ம் வருட மாணவருக்கான தொழில் நுட்பப் பரீட்சை

கொழும்பு, மே 6

ஒன்பதாம் வருட மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப தராதரப் பத்திரப் பரீட்சை, முதல் தடவையாக இவ்வாண்டு டிசம்பரில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வழமையான க.பொ.த. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்போது இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களும் கோரப்படும் என்று கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

எழுத்து செயல்முறை ஆகிய பாடங்களில் பரீட்சை நடத்தப்படும்.

எழுத்துப் பாடத்துக்கு 30 புள்ளிகளும், செயல்முறைப் பாடத்துக்கு 70 புள்ளிகளும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார். [இ-ஸ]

## A/L 91 - DAY CLASS

| | | |
|---|---|---|
| 8-30 CHE: | — | திரு. சிவசோதி |
| 9 30 PHY. | — | திரு. யோகதாசன் |
| 10 30 PURE | — | திரு. குணசிங்கம் |
| 10-30 ZOO. | — | திரு. தேவா |
| 11-30 APP. | — | திரு. குணசிங்கம் |
| 11-30 BOT | — | திரு. சதீஸ் |

ஆரம்பம்: 08 - 05 - 1991

**BOND கல்வி நிறுவனம்**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

[16661]

## பதவி வெற்றிடம்

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்

பனம் கிளி தொழிற்சாலைகள், வடிசாலைகள் என்பவற்றிற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்:-

1. விஞ்ஞான பட்டதாரிகள் அல்லது
2. க. பொ. த. [உயர்தரம்] விஞ்ஞானமும், 2 வருட தொழில் அனுபவம்

அல்லது

3. தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்களுடன், ஒரு வருட அனுபவம்

அல்லது

4. மேற்படி தொழிற்சாலைகளில் வேலை செய்த 3 வருட அனுபவம்.

சம்பளம்:- ரூபா 2000 — ரூபா 5000 வரை

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்,
25, பொன்னப்பா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

[சி-4970]

ஐந்தாவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிரிக்கெட் கழகங்களையும்

## ★ ஜொலிஸ்ராரர்ஸ் ★

விளையாட்டுக் கழகம் அழைக்கிறது.

விண்ணப்ப முடிவு: 10 - 05 - 1991 மாலை 6 மணி

குலுக்குதல் [Draw]: 12 - 05 - 1991 காலை 10 மணி

அனுமதிக் கட்டணம்: ரூபா 400/-

விண்ணப்பப் பத்திரங்களையும், போட்டி விதிமுறைகளையும் பெறுவதற்கு,

கப்டன் என் சோமசுந்தரம்,
45, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு பொ. பாலகிருஷ்ணன்,
100, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-4975]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஸ்ரீல் கபேட், மரக்கபேட், சோக்கேஸ், கவுண்டர் மேசைகள், சாப்பாட்டு மேசைகள், தையல்மெஷின், றேடியோ, கடைக்குரிய தளபாடங்கள், பனைமரங்கள், வீட்டுக் கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர்.

[16678]

## கண்டெடுக்கப்பட்டது

யாழ் நகர் வீதியில் 04 - 05 - 1991 அன்று ஒரு மூக்குக்கண்ணாடி பிரேம் கண்டெடுக்கப்பட்டது. அதற்கு உரியவர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ந. தேவராஜன் 257, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

[16684]

## ஆங்கில வகுப்புகள்

ஆங்கில மொழியை கற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்பவும், வசதிகளுக்கேற்பவும் குறைந்த கட்டணத்தில் கூடிய விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. By Manjula Balasingam 21/3, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[16537]

## இணுவில் ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் (1991)

| | | |
|---|---|---|
| 08 - 05 - 91 | புதன் | - கொடியேற்றத் திருவிழா |
| 09 - 05 - 91 | வியாழன் | - கைலாசவாகனத் திருவிழா |
| 13 - 05 - 91 | திங்கள் | - திருமஞ்சத் திருவிழா |
| 16 - 05 - 91 | வியாழன் | - சப்பரத் திருவிழா |
| 17 - 05 - 91 | வெள்ளி | - தேர்த் திருவிழா |
| 18 - 05 - 91 | சனி | - தீர்த்தத் திருவிழா |
| 19 - 05 - 91 | ஞாயிறு | - பூங்காவனத் திருவிழா |

[16688]

## தேவை

ஆண்களின் ஆடைகளைத் தைப்பதில் அனுபவம் உடையவர்கள் [ஆண், பெண் இருபாலாரும்] உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். பஷன் டெயிலர்ஸ், [நியூ வே றெக்கோடிங் சென்ரர்], பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

[16690]

## மணமகள் தேவை

யாழ். இந்து 35 வயது நிரம்பிய பிரான்ஸில் இருந்து வந்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் அனுஷம் கிரகபாவம் குறைந்தவர் உயரம் 5'4'' தொடர்பு A B C D E விவாகப் பொருத்துனர்' 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி.

[16672]

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு மோகனதாஸ் ஆகிய எனது அடையாள அட்டை [683470368V] சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்பாக 03 - 04 - 1991 இல் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விக்னேஸ்வரன் ஜுவலர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[16682]

யாழ்ப்பாணத்திற்கும் மூளாய்க்கும் இடையில் சந்தை - மானிப்பாய் வீதியில் 375871734V இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தர்மலிங்கம் கோமளம் காளிகோவிலடி, களபூமி, காரைநகர். அல்லது ஸ்ரீ மூகாம்பிகை, மரக்கறி. 247. கண்டி றோட், அரியாலை யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்க.

[16687]

## சோதிடம்

வாழ்க்கைப் பிரச்சினை, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் பிரச்சினை, தீராத நோய் இவைகளுக்கான நிவிர்த்திகள் கூறப்படும். வாய் பேசாத குழந்தைகள் நிவிர்த்தி செய்து கதைக்கின்றனர். 40 வயதிற்கு மேற்பட்டவர்களும் நிவிர்த்தி செய்து விவாகம் செய்துள்ளனர். நேரில் வரவும். ஸ்ரீ மானவ விநாயகர் சோதிட நிலையம், 148. பருத்தித்துறை வீதி. [அரசடிச்சந்தி], நல்லூர்.

[16679]

## புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5. 4)

28 - 4 - 1991 ஆம் திகதிப் பரீட்சை [முதலாவது] 5 - 5 - 1991 ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.00, மு.ப 10-30 புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி.ப 4 00 மக்கள் வைத்தியசாலை முன்பாக குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கில் நடைபெறும். ஆண்டு 4 பரீட்சை 12-5-1991 ஞாயிற்றுக்கிழமை மு.ப 8 00 பி.ப 1-00 நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும்.

[16662]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
09 - 11 - 1920

ஆண்டவன் அடியில்
09 - 05 - 1988

திதி: 06 . 05 . 1991

அமரர்
### நாகலிங்கம் [பாலகிருஸ்ணர்]
[பத்தர்]

எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் ஐயா!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு மறையாது
உங்கள் எதிர்பார்ப்புகளை எங்கள்
இலட்சியங்களாகக் கொண்டு
நீங்கள் காட்டிய பாதையில் செல்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி,
தெல்லிப்பளை.

[16669]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சந்திரராசா சண்முகநாதன்
(சாமி)
[மோட்டர் மெக்கானிக்]

மலர்வு: 15 - 10 - 1950
உதிர்வு: 28 - 04 - 1989

திதி: 06 — 05 — 1991

சீரோடு சிறப்போடு சிறந்த நல்ல செல்வர்கள்
காரோடு முகில் மறைந்த கதிர் மதியும் போலிங்கு
வேரோடு மரம் புரண்டு வீதியிலே வீழ்ந்ததுபோல்
ஊரோடு உற்றாரும் உமை நினைந்து வாடுகின்றார்
உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்.

கொண்டலடி வைரவர் கோவில்
வடக்கு ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

[16670]

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
### திருநெல்வேலி

உ

**பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவி:**

மேற்படி சங்கத்தினால் நடாத்தப்படும் விடுதிக்கு பொறுப்பாளர் ஒருவர் தேவை; 28 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் விடுதியில் தங்கியிருந்து சேவை செய்ய வேண்டும். உணவு, தங்குமிட வசதி மேற்படி சங்கத்தினால் வழங்கப்படும்.

சம்பளம்: தகுதியடிப்படையில் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

கல்வித் தகைமை, அனுபவம் மற்றும் விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை 1991-05-20ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அஞ்சல் மூலமாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

[சி 4978]

## ஓராண்டு நினைவஞ்சலி



### பொன்னுத்துரை இராசரெத்தினம்

தோற்றம்: 14 - 03 - 1938
மறைவு: 16 - 04 - 1990

அன்பு, பண்பு, பாசத்தால் அரவணைத்த அப்பா!
ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறவில்லை எம் கண்ணீர்
கதியற்றுக் கலங்கும் இக் கடுங்கால வேளைதனில்
விரைந்து வந்து காத்திடுவீர் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர் துளிகளினால் அர்ச்சிக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவு நாள் இன்று [06-05-1991] அவரது இல்லத்தில் நடைபெறும்.

உம் நினைவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர், சகோதரர்கள்.

ஆடியபாத றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[16689]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

யாழ் நகர் வீதியில் 04 - 05 - 1991 அன்று ஒரு மூக்குக்கண்ணாடி பிரேம் கண்டெடுக்கப்பட்டது. அதற்கு உரியவர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ந. தேவராஜன் 257, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

[16684]

### ஆங்கில வகுப்புகள்

ஆங்கில மொழியை கஷ்டமின்றிக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்பவும், வசதிகளுக்கேற்பவும் குறைந்த கட்டணத்தில் கூடிய விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[16527]

இணுவில்

ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோவில்

## வருடாந்த மகோற்சவம் (1991)

| | | |
|---|---|---|
| 08 - 05 - 91 | புதன் | - கொடியேற்றத் திருவிழா |
| 09 - 05 - 91 | வியாழன் | - கைலாயவாகனத் திருவிழா |
| 13 - 05 - 91 | திங்கள் | - திருமஞ்சத் திருவிழா |
| 16 - 05 - 91 | வியாழன் | - சப்பறத் திருவிழா |
| 17 - 05 - 91 | வெள்ளி | - தேர்த் திருவிழா |
| 18 - 05 - 91 | சனி | - தீர்த்தத் திருவிழா |
| 19 - 05 - 91 | ஞாயிறு | - பூங்காவனத் திருவிழா |

[16688]

## ராஜீவ் மீது விசாரணை நடத்தப்படும்

புதுடில்லி, மே 6

பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் அமைப்பின், அது போபோர்ஸ் பேர ஊழல் தொடர்பாக திரு ராஜீவ் காந்தியை நீதி மன்றத்தில் நிறுத்தி விசாரணை நடத்தும்.

இப்படி பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு எல். கே. அத்வானி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

[இ-எ]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
09 - 11 - 1920

ஆண்டவன் அடியில்
09 - 05 - 1988

திதி: 06 . 05 . 1991

அமரர்

### நாகலிங்கம் [பாலகிருஸ்ணர்]

[பத்தர்]

எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் ஐயா!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு மறையாது
உங்கள் எதிர்பார்ப்புகளை எங்கள்
இலட்சியங்களாகக் கொண்டு
நீங்கள் காட்டிய பாதையில் செல்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி,
தெல்லிப்பளை.

[16669]

உ

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### திருநெல்வேலி

### பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவி:

மேற்படி சங்கத்தினால் நடாத்தப்படும் விடுதிக்கு பொறுப்பாளர் ஒருவர் தேவை; 28 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் விடுதியில் தங்கியிருந்து சேவை செய்ய வேண்டும். உணவு, தங்குமிட வசதி மேற்படி சங்கத்தினால் வழங்கப்படும்.

சம்பளம்: தகுதியடிப்படையில் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

கல்வித் தகைமை, அனுபவம் மற்றும் விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை 1991-05-20ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, கடித மூலமாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

[சி 4978]

## தமிழகத்துக்கு வி.பி.சிங்.

சென்னை, மே 6

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் நாளை 7 ஆம் திகதி தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சென்ற முதலாம் திகதி முதல் மாவட்டங்களில் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இதுவரை 5 மாவட்டங்களுக்கு அவர் சென்றுவிட்டார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா இதுவரை 12 மாவட்டங்களில் தேர்தல்பிரசாரத்தை முடித்துவிட்டார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்றும் இந்திரா காங்கிரஸ் இம் மாதம் 10 ஆம் திகதி முதல் தீவிர பிரசாரத்தில் ஈடுபடவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## ஓராண்டு நினைவஞ்சலி



### பொன்னுத்துரை இராசரெத்தினம்

தோற்றம்:
14 - 03 - 1938

மறைவு:
16 - 04 - 1990

அன்பு, பண்பு, பாசத்தால் அரவணைத்த அப்பா! ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறவில்லை எம் கண்ணீர் கதியற்றுக் கலங்கும் இக் கடுங்கால வேளைதனில் விரைந்து வந்து காத்திடுவீர் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்த் துளிகளினால் அர்ச்சிக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவு நாள் இன்று [06-05-1991] அவரது இல்லத்தில் நடைபெறும்.

உம் நினைவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர், சகோதரர்கள்.

[illegible] கோவில் [illegible]
[illegible]
[illegible].

[16689]

## சங்கருடன் ஸமது போட்டி

இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து வெளியேறிய இந்திய முஸ்லிம் லீக் யூனியன் தமிழகத் தலைவரான ஏ. கே. அப்துல் ஸமது, தமிழ்நாடு மயிலாடுதுறை லோகசபைத் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடுகிறார்.

மயிலாடுதுறைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக திரு. ராஜீவ் காந்தியின் நெருங்கிய சகாவான திரு. மணிசங்கர்ஐயர் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சந்திரராசா சண்முகநாதன்

(சாமி)

[மோட்டர் மெக்கானிக்]

மலர்வு:
15 - 10 - 1950

உதிர்வு:
28 - 04 - 1989

திதி: 06 — 05 — 1991

சீரோடு சிறப்போடு சிறந்த நல்ல செல்வர்கள்
காரோடு முகில் மறைத்த கதிர் மதியும் போலின்று
வேரோடு மரம் புரண்டு வீதியிலே வீழ்ந்ததுபோல்
ஊரோடு உற்றாரும் உமை நினைந்து வாடுகின்றார்
உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாளிமார்.

கொண்டலடி வைரவர் கோவில்
வடக்கு ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

[16670]

## ஈரான் ஆதரிக்கும்

தெஹ்ரான், மே 6

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனை போர்க் குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஈரான் முதன் முறையாக ஆதரித்துள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய குற்றங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காக ஜனாதிபதி சதாம் ஹுசேனை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலயாதி நேற்று ஈரான் தலைநகர் தெஹ்ரானில் செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

[அ-ஏ]

## மு. கவுக்கு எதிராக சுப்பு போட்டி

சென்னை, மே 6

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியை எதிர்த்து சென்னை, துறைமுகம் தொகுதியில் பிரபல தொழிற் சங்கத் தலைவரான க. சுப்பு இந்திராகாங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

திரு. சுப்பு முன்னர் தி. மு. கவில் இருந்தவர். 1973, 1977 களில் சட்டசபையில் எம். எல். ஏயாகவும் இருந்துள்ளார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# கீழ்த்தரமான தாக்குதல்!

சர்வதேச தொண்டர் நிறுவனங்களில் ஒன்றான பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த (எம். எஸ். எவ்) வைத்தியக் குழுவினர் மீது வவுனியாவில் வைத்து விமானப்படையினர் ஹெலிக்கொப்டரினாலும், பொம்மர்களாலும் தாக்குதல் நடத்தி உள்ளனர்!

கஷ்ட காலத்தில் மக்களுக்கு உதவ வந்த சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் மீதும் ஸ்ரீலங்கா அரச படையினர் தமது சண்டித்தனத்தைக் காட்டியிருப்பது இது முதற் தடவை அல்ல.

ஆபத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு, அவலத்தில் அந்தரிக்கும் மக்களுக்கு சாதி, சமய, இன, பிரதேச வேறுபாடு இன்றி பனிதாபிமானத்துடன் மனித நேயத்துடன், பிரச்சினைகளில் பக்கசார்பு இன்றிச் சேவை புரிபவையே சர்வதேச தொண்டர் நிறுவனங்கள்.

அந்த நிறுவனங்கள் ஒரு நாட்டிற்குச் சென்று பணி புரிவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். ஆனால் இலங்கையில் அரசு - அதன் படைகள் - தலைகீழாக நடக்கின்றன வாகனத்தைச் செல்வதற்கு அனுமதித்துவிட்டு முதுகில் குத்துவது போலத் தாக்குகிறார்கள்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தி அவர்களைக் கொன்றுவிட்டும், சித்திரவதை செய்துவிட்டும் போராளிகளைத் தாக்கியதாகக் கூறுவது போலவே—

தொண்டர் நிறுவனங்களின் வாகனங்களில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாலேயே பதில் தாக்குதல் நடத்தியதாகத் தமது குற்றத்தை மூடி மறைக்கவும் பார்க்கிறார்கள் அரசினர்.

அரசின் இந்த மூடிமறைக்கும் செயலை, சம்பந்தப்பட்ட, தொண்டர் நிறுவனம் மட்டும் அன்றி ஏனைய நிறுவனங்களும் அம்பலப்படுத்த வேண்டும். இது விடயத்தில் கூட்டாக இவை செயற்பட்டு இலங்கை அரசின் கனவான்தனம் இல்லாத நடத்தையையும் நம்பிக்கைத் துரோகம் செய்யும் சுபாவத்தையும் வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

அது மட்டும் போதாது. இலங்கையில் தமிழர்கள் எப்படி அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள், அவர்களது மனித உரிமைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றன, அவர்கள் மீது அரசு நடத்தும் ஆக்கிரமிப்பும், அட்டூழியங்களும் எத்தன்மையானவை என்பதை வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்லத் தயங்கலாகாது. தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்குக் கூட அரசு தமக்கு எவ்வாறு குந்தகம் விளைவிக்கிறது என்பதைப் புட்டுக் காட்ட வேண்டும்.

தமிழர்களுக்கு—பாதிக்கப்படுபவர்களுக்கு—உதவும் பணிக்கு அரசு குந்தகம் விளைவிக்கிறது என்பதற்காக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மூட்டையைக் கட்டிக் கொண்டு மெதுவாக விலகிச் செல்ல நினைக்கக்கூடாது. தங்கள் தலைமையகங்களுக்கு மட்டும் அறிக்கை அனுப்பி விட்டு அது போதும் என்று திருப்தி அடைந்துவிடக் கூடாது.

தமிழர்களையும், அவர்களுக்கு மனிதாபிமான உதவி செய்ய வந்த தங்களையும் அரசு எவ்வாறு வருத்துகிறது, கீழ்த்தரமாக நடத்துகிறது என்பதைச் சர்வதேச அரங்குகளில் அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# குமுழமுனை, அளம்பில், செம்மலை மக்கள் இடம்பெயர்கின்றனர்

## செஞ்சிலுவைச் சங்க வீடுகளும் சேதம்

புதுக்குடியிருப்பு, மே 6

குமிழமுனை, அளம்பில், செம்மலை ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் அங்குள்ள மக்கள் பெரும்எண்ணிக்கையில் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

அவ்ரோ, பொம்மர் தாக்குதல்களினால் பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.

அத்துடன் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

அப்பகுதியிலிருந்து வெறுங்கையுடன் தமது வீடுகளை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கும் மக்கள் இடமின்றி மரநிழல்களில் தங்கியுள்ளனர்.

ஏற்கனவே உள்ள முகாம்களில் முல்லைத்தீவு. திருமலை அகதிகள் நிறைந்திருப்பதே இதற்குக் காரணம்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் அகதிகளுக்கென இப்பகுதியில் ஏற்கனவே கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளும் இந்த இராணுவ நடவடிக்கையில் சேதமாக்கப்பட்டுள்ளன இதனால் இந்த வீடுகளில் வசித்த 200க்குமேற்பட்ட குடும்பங்கள் மீண்டும் அகதிகளாகி உள்ளன.

[த-126]

# நெருக்கடிக்கு விரைவில் தீர்வு என்கிறார் ஜனாதிபதி

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் நடந்த பல தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் திரு பிரேமதாசா பேசினார்.

அப்போதே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அரசியல் லாபம் கருதிசுதந்திரக் கட்சி மொழிப் பிரச்சினையை உருவாக்கியது.

எமது அரசாங்கம் இன்று மொழிப்பிரச்சினைக்கு திருப்திகர தீர்வு கண்டுள்ளது.

விரைவில் விடுதலைப் புலிகள் பிரச்சினைக்கும் நான் தீர்வு காண்பேன்,

இப்படி ஜனாதிபதி பிரேமதாசா சொன்னார்.

நிருவாக சேவைப் பரீட்சை:

# தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், மே 6

இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III க்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த மாதம் வடக்கிலிருந்து ஒருபரீட்சார்த்தியாவது தோற்றாத நிலையிலும் கிழக்கிலிருந்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் தோற்றாத நிலையிலும். ஸ்ரீலங்கா அரசினால் நடத்தி முடிக்கப்பட்டது தமிழ் மாணவர்களின் கல்வியை அழிக்கும் ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட சதிச் செயல்களில் ஒன்றாகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளார்:

வடக்கு - கிழக்கில் பரீட்சை நிலையங்கள் அமைத்து விசேஷ பரீட்சை ஒன்றை நடத்தும்படி. ஜனாதிபதி, கல்வி அமைச்சர், கல்வித்துணை அமைச்சர், பரீட்சை ஆணையாளர், கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கு பொதுச் செயலாளரினாலும் இப்பரீட்சைக்கு தோற்றும் 500க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகளினாலும் ஒப்பமிடப்பட்ட மகஜர் அனுப்பப்பட்டுள்ளது

இதே போன்று இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III க்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடத்தாது வடக்கு-கிழக்குப் பகுதிகளிலும் நடத்தும்படியும் இப்பரீட்சையை ஜி சீ ஈ. உயர்தர விசேஷ பரீட்சைத் திகதிகளிலோ அல்லது கிடைத்தாள்கள் திருத்தும் தினங்களிலோ நடத்தாது வேறு திகதிகளில் நடத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் இலங்கை கல்வி நிருவாக சேவை III க்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை திகதி நிர்ணயிக்கப்படாது பின்போடப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாக பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். [இ]

# சங்கீத ஆசிரியருக்கான சேவைக் கால பயிற்சி வகுப்பு

நவாலி, மே 6

யாழ், மாவட்ட பாடசாலைகளில் சங்கீதம், நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் இம்மாதம் பின்வரும் திகதிகளில் காலை 8-30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன,

10ஆம் திகதி வெள்ளிக்கிழமைமருதனார்மடம்கோட்டத்துக்கான பயிற்சி வகுப்புகள் யாழ். இராமநாதன் கல்லூரியிலும் 11ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி கோட்டத்துக்கான பயிற்சி வகுப்பு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் —

13ஆம் திகதி திங்கள் வேலணைக் கோட்டத்துக்கான பயிற்சி வகுப்பு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்—

20ஆம் திகதி [illegible] பண்டத்தரிப்பு கோட்டத்துக்கான பயிற்சி வகுப்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் —

24ஆம் திகதி வெள்ளி வடமராட்சி கோட்டத்துக்கான பயிற்சிவகுப்பு பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

[இ 100]

# மாணவருக்கு உபகரணங்கள்

சாவகச்சேரி, மே 6

தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகம் பொன்னம்மான் அகதிகள் குடியேற்றத்திட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கியுள்ளது.

[த-31]

# குறுகிய அறிவித்தலில் எஞ்சிய பாடங்கள்

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

விசேஷ ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் மீதிப்பாடங்களை குறுகிய அறிவித்தலில் எடுக்க தயாராக இருக்க வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுலே நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வந்த விசேஷ ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சை இன்று (திங்கள்) முதல் இடைநிறுத்தி வைக்கப்படுவதாகவும்—

இப்பரீட்சையின் மீதிப் பாகத்தைக் கூடிய விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும்— பரீட்சையின் மீதிப் பாகத்தை நடத்துவதற்கான புதிய திகதிகள் பரீட்சார்த்திகளுக்கு வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். [இ-எ]

# கைத்தொழில் உற்பத்தி மீண்டும் ஆரம்பம்

மானிப்பாய், மே 6

சிறுகைத்தொழில் திணைக்களத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல கைத்தொழில் நிறுவனங்கள் மீண்டும் உற்பத்தியை ஆரம்பித்து வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

சங்கானையில் உள்ள மட்பாண்டத் தொழிற்சாலை. மல்லாகம், அளவெட்டி, சங்கானை, அராலி, மீசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தென்னந்தும்புத் தொழிற்சாலை போன்றவை இவ்வாறு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில் நிறுவனங்களில் சிலவாகும்.

இத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அவ்வப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து, சந்தைப்படுத்தி அவற்றுக்கு உற்சாகம் அளித்து வருகின்றன.

[த 90]

# தொண்டமான் சமரச முயற்சி?

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமைச்சர் தொண்டமான் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்று கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி பிரேமதாசாவை கடந்த சில தினங்களாக அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திவருகிறார் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-எ]

## டாக்காவுக்கு

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காபோய்ச் சேர்ந்தார்.

அவருடன் இரண்டு ஹெலிக்கொப்டர்களில் நிவாரணப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன, [ஓ-எ]

## 2 வாரங்களின் பின் படகுச் சேவை

# உணவுப் பொருள்களை படையினர் கைப்பற்றினர்

நெடுந்தீவு, மே 6

இரண்டு வாரங்களின் பின் கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இருந்து பிரயாணிகளுடன் குமுதினிப் படகு குறிகாட்டுவான் வந்தது.

நயினாதீவு முகாமில் கடற்படையினரின் பரிசோதனை இடம் பெற்ற சமயம் பயணிகளிடம் இருந்து சிறிய அளவிலான உணவுப் பொருள்களை படையினர் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட பொருள்களை உரியவர்கள் மீண்டும் நெடுந்தீவுக்குத் திருப்பிச்செல்லும் போது எடுத்துச் செல்லலாம் எனவும் சோதனையின் போது படையினரால் தெரிவிக்கப்பட்டதாம்.

[இ-111]

## வைக்கோல்

அராலி, மே 6

கிளிநொச்சி, வவுனியாப் பகுதிகளில் இருந்து குடாநாட்டுக்கு வைக்கோல் கொண்டு வருவது தடைப்பட்டுள்ளது. இதனால் கால்நடை தீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

[இ-18]

# வலி. வடக்கு உதவி அ.அ. பிரிவு 2 ஆகப் பிரிக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 6

45 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக [illegible]

24 கிராம சேவையாளர்களைக் கொண்ட காங்கேசன்துறை, மயிலிட்டி பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதி ''வலி. வட கிழக்கு'' உதவி அரசாங்க அதிபர் பிரிவு எனவும், 21 கிராம சேவையாளர்களைக் கொண்ட தெல்லிப்பளை, மல்லாகம் பிரதேச உபஅலுவலகங்கள் அமைந்துள்ள பகுதி ''வலி. வடமேற்கு'' உதவி அரசாங்க அதிபர் பிரிவு எனவும் அழைக்கப்படும்.

இதே போன்று வடபகுதியில் மேலும் சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரிக்கப்பட உள்ளன.

மக்கள் தமது தேவைகளை கஷ்டமின்றி பெற்றுக்கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[இ-68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஆட்லறி ஷெல்கள் தொல்புரத்தில் விழுந்தன

சுழிபுரம், மே 6

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் தொல்புரம், கோட்டைக்காடு பகுதிகளில் விழுந்து வெடித்தன.

தொல்புரம் — பன்னமூலைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் பயன்தரும் மரங்கள் சில முறிந்து வீழ்ந்தன. அருகில் உள்ள வீட்டு ஜன்னல் கம்பி பிடுங்கி எறியப்பட்டது.

உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

[ஒ-28-3]

# கூட்டுறவு ஊழியருக்கு ரூ. 300 சம்பள உயர்வு

கொழும்பு, மே 6

கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு மாதம் 300 ரூபா சம்பள உயர்வு வழங்குவது என்று அரசு அறிவித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இச்சம்பள உயர்வை வழங்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்சிக்கு பணிப்புரைவழங்கினார்.

கொழும்பில் நேற்று சுகததாஸ விளையாட்டரங்கில் நடந்த கூட்டுறவு ஊழியர் மாநாட்டில் ஜனாதிபதி பிரேமதாஸா பேசினார்.

அப்போது அரசின் முன்கண்ட முடிவுகளை ஜனாதிபதி வெளியிட்டார். [ஐ-எ]

# காணிப் பங்கீடு, சுவீகரிப்பு மாகாண சபைக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், மே 6

காணிப்பங்கீடு, காணி சுவீகரிப்பு ஆகிய இரண்டையும் மேற்கொள்ளும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு காணி விவகாரம் குறித்து அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்த சுற்று நிருபம் ஒன்றை உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல செயலகங்களுக்கும் அனுப்பியுள்ளது.

சுவர்ணபூமித் திட்டம் தவிர்ந்த ஏனைய காணிப் பங்கீடுகள், காணிச் சீர்திருத்தக் குழுவின் கீழ் உள்ள காணிகளைப் பொறுப்பேற்றல், அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களுக்குக் காணியை சொந்தமாக்கல் போன்ற பணிகளை மேற்கொள்ளுமதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அந்த சுற்றுநிருபம் தெரிவிக்கிறது. [ஒ-3]

# காத்து நின்ற லொறிகள் திரும்பி வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 6

கொழும்பு செல்வதற்கென குடா நாட்டில் இருந்து புறப்பட்டு, வவுனியாப் பகுதியில் சுமார் 20 நாட்கள் காத்திருந்துவிட்டு பல லொறிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை திரும்பி வந்தன.

குடா நாட்டின் சில விளைபொருள்களை எடுத்துச் சென்ற சுமார் 200 லொறிகள் இவ்வாறு திரும்பி வந்தன: அவற்றில் பலவும் எடுத்துச் சென்ற விளை பொருள்கள் பழுதடைந்து விட்டதால், அவற்றை வீதிகளில் வீசிவிட்டு வந்ததாக லொறிச் சாரதிகள் சிலர் தெரிவித்தனர்.

சில லொறிகள் இன்னும் கிளிநொச்சியில் நிற்பதாகவும் வவுனியாவில் தரித்து நின்ற எஞ்சிய லொறிகள் வவுனியாவில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்ததினால் கனகராயன்குளத்திற்கு வடக்கே கொண்டு வரப்பட்டுவிட்டதாகவும், லொறிச் சாரதிகள் மேலும் தெரிவித்தனர். [அ-15]

## தீவுப்பகுதியிலிருந்து வந்தோர்

# உலர் உணவு அட்டை இல்லாவிடில் பதிய வசதி

யாழ்ப்பாணம், மே 6

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் தமது உலர் உணவு அட்டையைக் கொண்டுவராது விட்டால் உடனடியாக தாம் தங்கியிருக்கும் பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு ஐ. நித்தியராஜ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கிராம சேவையாளர்களிடம் தமது விவரங்களைப் பதியுமிடத்து நிவாரணங்களைப் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

[ஒ-3]

[முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்]

# 16 அகதி முகாம்களுக்கும் உணவு, ம. எண்ணெய்

## செயலகம் வழங்குகிறது

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 16 அகதி முகாம்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும், மண்ணெண்ணெய்யும் செயலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார்.

முகாம்களுக்கு உணவு சமைக்கத் தேவையான அரிசி, மா, சீனி, கௌப்பி, பருப்பு, தேயிலை, பால்மா ஆகியனவும்— மரக்கறி வகைகளும்— 10 லீற்றர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். [ஒ-3]

# இன்று அறிமுக விழா

யாழ்ப்பாணம், மே 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் எழுதிய 'தமிழரின் தாகம்' கவிதை நூலின் அறிமுக விழா இன்று நடைபெறுகிறது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பி. ப. 3 மணிக்கு நடக்கும் இந்தவிழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சி பகுதி இணைப்பாளர் திரு குமரன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். [த-5]

# மரண தண்டனை

பருத்தித்துறை மருதடியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் வாசு [வேலாயுதம் விஜயகுமார் — பருத்தித்துறை] என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

ஊழல், பாலியல் நடவடிக்கைகள் போன்ற சமூக சீர்கேடுகளில் ஈடுபட்டமைக்காக இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

★ ★

திருகோணமலை 58 ஆம் கட்டைப் பகுதியில் கடந்த புதன் கிழமை இரவு 9 மணியளவில் பெண் ஒருவருக்கும் ஆண் ஒருவருக்கும் புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

காட்டிக்கொடுக்கும் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டமைக்காகவே இவ் விருவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோணலிங்கம் சுசிலா [18 வயது — பட்டித்திடல்], அந்தோனி கந்தசாமி [40 வயது —58 ஆம் கட்டை] ஆகிய இருவருக்குமே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. [ஒ]

# இளைஞர் கைது

கடந்த வெள்ளியன்று வந்தாறு மூலை இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து களுவன்கேணியை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். அச்சமயம் கிருஷ்ணகுமார் [வயது 22] என்ற இளைஞரை அவர்கள் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். [உ]

# படகு கவிழ்ந்து 60 பேர் பலி!

ஹைதராபாத், மே 6

ஆந்திர மாநிலத்தில் ராஜமகேந்திரபுரம் அருகில் கோதாவரி ஆற்றில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 33 பேர் பெண்கள், 13 பேர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

தர்மபுரியில் நேற்று இடம்பெற்ற லொறி - வான் விபத்தில், வானில் இருந்த பயணிகளில் 17 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அவர்களில் 5 பேர் குழந்தைகள்; 7 பேர் பெண்கள் ஆவர் [ஒ எ]

# ஓமந்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யனில் சண்டை நடைபெற்ற இடத்தை நோக்கி — விமானங்கள் மற்றும் ஹெலிகளின் உதவியுடன் — படையினர் முன்னேற முற்பட்டபோது மோதல் வெடித்தது.

இந்தச் சண்டையில் மேலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும்—

அவர்களில் இருவரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முழுநாளும் இடம் பெற்ற தாக்குதல்களில் படையினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர். [உ]

# பாக். ராணுவம் ஷெல் வீச்சு; 5 இந்திய படையினர் காயம்

புதுடில்லி, மே 6

காஷ்மீர் வடக்குப் பிரதேசத்தில் இந்திய - பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் நேற்று பாகிஸ்தான் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் ஐந்து இந்தியப் பாதுகாப்புப் படையினர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து எல்லைப் புறப் பகுதியில் பதற்ற நிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

# புஷ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையில்—

திரு. புஷ் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அவரது உடல் நிலை இடமளிக்குமா என்ற கேள்வி அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் தற்போது எழுப்பப்பட்டுள்ளது. [அ-எ]

[முந்திய செய்தி 1 ஆம் பக்கத்தில்]

# காயமுற்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு பிரெஞ்சு பெண் டாக்டர்கள், அவர்லாந்தைச் சேர்ந்த இரண்டு தாதிகள், உள்நாட்டைச் சேர்ந்த சாரதி ஆகியோர் காயமுற்றிருந்தனர்.

இவர்களில் செல்வி கதரினா என்ற டாக்டருக்கு தோள் மூட்டில் ஹெலியிலிருந்து சுடப்பட்ட ரவை துளைத்திருந்தது. கொழும்பு ஆஸ்பத்திரியில் உடனடிச் சிகிச்சை பெற்ற பின்னர் நல்வரும் நேற்று பாரிஸ் பயணமானார்கள்.

சர்வதேசத் தொண்டர் நிறுவன ஊழியர்கள் தாக்கப்பட்டது குறித்து தொண்டர் நிறுவன வட்டாரங்களில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. [அ-எ]

# இராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் ஆறு மாத கால அவகாசம் வேண்டும் என்று இராணுவத் தளபதி மறைமுகமாக அரசுக்கு விளங்கவைத்திருப்பதாகத் தெரிகிறது.

நிர்ணயிக்கப்பட்ட திட்டம் பின்னடைவு காண்பதற்கு இராணுவ ஆளணி எண்ணிக்கை [மொத்தம் 75,000] போதுமானதல்ல என்றும் ஒரு காரணம் பிரஸ்தாபிக்கப்படுகிறது:

1990 டிசம்பர் கடைசி வாரத்தில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்த போது—

ஜெனரல் வணசிங்கா சமர்ப்பித்த திட்டத்தை காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவும் முழுமையாக ஆதரித்தார்.

அதனாலேயே அப்போது அரசு யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்ற தளம்பல் நிலையில் இருந்தது என்றும்—

இராணுவத்துக்கு அவகாசம் வழங்க முடிவு செய்து யுத்த நிறுத்தத்தை நிராகரித்தது என்றும்— இங்கு அரசியல் வட்டாரங்கள் இப்போது தகவல் வெளியிடுகின்றன.

கால அவகாசம் இவ்வருடம் டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட வேண்டும் என்பது குறித்து இன்னமும் உத்தியோகபூர்வமாக அரசுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனி - சவிரி

கண்டி வீதி 156 ஆம் கட்டை, கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவரும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவருமான அந்தோனி - சவிரி 05 - 05 - 91 இல் சில்லாலையில் காலமானார்.

இவர் அந்தோனியாளின் அன்புக் கணவரும், யேசுராசா [ஜெரி மினி கினிமா புளியங்கூடல் சந்தி] ஜெயசீலன், ஞானசீலன், அருள்சீலன் [இணைப் போதகர் ஜெப ஆலயம் கிளிநொச்சி], அருள்சீலி, அருளமராசா, அன்ரனியாக்கிறேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மொனிக்கம்மா, அல்போன்ஸ்சம்மா, சந்திரலூசியா, பி. அகுஸ்தீன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனி, றெஜி ஜெறி, செல்வன், ரூபி, ஜெனிற்றா, ஆஷா, நிஷா, ஞானேஸ், தீசன், யசோ, அன்பரசன், அருள்தாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 07 - 05 - 91 செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சவிரி - யேசுராசா
[மகன்]

இலங்காமாதா வீதி,
சில்லாலை கிழக்கு.

[16548]

## வைத்திலிங்கம் செல்வரத்தினம்

[இளைப்பாறிய ஓவசியர்]

உடுவில் மல்வத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்வரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமணியின் அன்புக் கணவரும், சாந்தி, றதினா, சுபத்திரா, லலிதா, காலம் சென்ற வசந்தா, நறாம்நாத், சுவானா, ஜெயந்தா, இதயா ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திலிங்கம், இராசரத்தினம், இராசமணி ஆகியோரின் சகோதரரும், செல்வநாயகம், காலம் சென்ற இராசா, மனோகரன், எட்வேட் றோகான் நேசன், மகேஸ்வரி, நளாயினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட் கிழமை [6-5-91] பி. ப. 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்
இ. செல்வநாயகம்
[மருமகன்]

உரும்பராய் தெற்கு

[16549]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 -05- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org